LOLC பினான்ஸ் பிஎல்சி
நிதி அறிக்கைகள்

LOLC பினான்ஸ்

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய மொத்த வருமானம்

	மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கு	
	31.03.2024 (தணிக்கை செய்யப்பட்டது) ருபா. "000	31.03.2023 (தணிக்கை செய்யப்பட்டது) ருபா. "000
வட்டி வருமானம்	75,005,901	69,039,674
வட்டி செலவினம்	(37,019,230)	(36,124,596)
நிகர வட்டி வருமானம்	37,986,671	32,915,079
நிகர பிற இயக்க வருமானம்	13,460,940	9,982,265
மொத்த வருமானம்	**51,447,612**	**42,897,344**
இயக்க செலவுகள்		
வட்டி செலவைத் தவிர்த்து நேரடி செலவுகள்	(1,020,318)	(879,932)
ஆளணி செலவினங்கள்	(6,886,450)	(6,057,681)
பணிப்பாளகள் ஊதியங்கள	(20,654)	(38,365)
தேய்மானம்	(1,186,106)	(734,220)
பொது மற்றும் நிர்வாக செலவுகள்	(12,698,002)	(11,250,859)
வரிவிதிப்பு மற்றும் சாத்தியமான இழப்புகளுக்கான ஏற்பாடுகளுக்கு முன் செயல்பாடுகளின் லாபம்	**29,636,082**	**23,936,286**
கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதி குறைப்பு	(4,656,710)	(3,623,998)
சாத்தியமான இழப்புகளுக்கான ஏற்பாட்டிற்குப் பிறகு இயக்க லாபம்	**24,979,372**	**20,312,288**
நிதி சேவைகளுக்கு மதிப்பு கூட்டப்பட்ட வரி	(3,465,810)	(4,023,911)
வருமான வரி செலவுக்கு முன் லாபம்	**21,513,562**	**16,288,378**
இணை நிறுவனத்தின் லாபம் / (இழப்பு) பங்கு	33,934	(895,111)
வருமான வரி செலவுக்கு முன் லாபம்	**21,547,495**	**15,393,267**
வருமான வரி (செலவு) / தலைகீழ்	-	-
வரிவிதிப்புக்குப் பிறகு லாபம்	**21,547,495**	**15,393,267**
மற்ற விரிவான வருமானம்		
லாபம் அல்லது இழப்புக்கு மறுவகைப்படுத்த முடியாத உருப்படிகள்		
மீள் மதிப்பிட்ட பணியாளர் நன்மை பொறுப்பு இலாபம்/நட்டம	27,396	51,711
தொடர்புடைய வரி	(8,219)	(28,785)
	19,177	**22,926**
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான மறுமதிப்பீடு ஆதாயம்	-	-
தொடர்புடைய வரி	-	(258,444)
	-	**(258,444)**
நியாயமான மதிப்பில் இயக்கம் (மற்ற விரிலான வருமானங்களின் இல் பங்கு முதலீடுகள்)	(29,429)	12,376
தொடர்புடைய வரி	-	-
	(29,429)	**12,376**
லாபம் அல்லது இழப்புக்கு மறுவகைப்படுத்த முடியாத மொத்த மதிப்பு	**(10,252)**	**(223,142)**
லாபம் அல்லது இழப்புக்கு மறுவகைப்படுத்தக்கூடிய பொருட்கள்		
நியாயமான மதிப்பு இருப்பில் இயக்கம்	-	175,481
தொடர்புடைய வரி	-	3,019
	-	178,499
ஹெட்ஜ் ரிசர்வ் நகரும்	-	155,895
தொடர்புடைய வரி	-	(31,179)
	-	124,716
லாபம் அல்லது இழப்புக்கு மறுவகைப்படுத்தக்கூடிய மொத்த மதிப்பு	-	**303,215**
மொத்த பிற விரிவான வருமானம், வரி நிகர	**(10,252)**	**80,074**
ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்	**21,537,243**	**15,473,340**
ஒரு பங்குக்கு அடிப்படை வருவாய்	**0.65**	**0.72**

அடைப்புகளிலுள்ள இலக்கங்கள் கழிவுகளைக் குறிப்பிடுகின்றன.

EY
Building a better working world

Ernst & Young
Chartered Accountants
Rotunda Towers
No. 109, Galle Road
P.O. Box 101
Colombo 03, Sri Lanka

Tel : +94 11 246 3500
Fax : +94 11 768 7869
Email: eysl@lk.ey.com
ey.com

PNS/TP

LOLC FINANCE PLC யின் பங்குதாரர்களுக்கானசுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

கணக்காய்வு மற்றும் நிதிக்கூற்றுகள் தொடர்பான அறிக்கை

அபிப்பிராயம்

31 மார்ச் 2024 அன்று உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்ட மற்றும் ஏனைய வருமானங்கள் கூற்று, உரிமை அசைவுக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சற் கூற்று மற்றும் அதனுடன் இணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான குறிப்புகள் அத்துடன் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் ஒரு சுருக்கம் உள்ளடங்கலான நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களை நாங்கள் கணக்காய்வு செய்திருக்கிறோம்.

எமது அபிப்பிராயத்தின்படி, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 31 மார்ச் 2024 அன்று உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அதன் நிதிப் பெறுபேறுகள் அத்துடன் ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல்கள் ஆகியவை தொடர்பாக இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு இணக்கமான முறையில் ஒரு உண்மையும் நியாயமுமான நோக்கினை வழங்குகின்றன.

அபிப்பிரயாத்திற்கான அடிப்படை

நாம் எமது கணக்காய்வினை இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு இணக்கமான முறையில் நடாத்தி இருக்கின்றோம். அந்த நியமங்களின் கீழ் எமது பொறுப்புகள் எமது அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டு இருக்கின்றன. இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட நெறிமுறைக் கோட்பாட்டு விதிமுறைகளின்படி நாம் கம்பனியிலிருந்து சுயாதீனமானவர்களாக இருப்பதுடன் நெறிமுறைகளின் கோட்பாட்டு விதிமுறைகளுக்கு இணக்கமான முறையில் நாம் எமது நெறிமுறை சார்ந்த பொறுப்புகளை நிறைவேற்றி இருக்கின்றோம். எமது அபிப்பிராயத்திற்கு ஒரு அடிப்படையினை வழங்கத்தக்க வகையில் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை நாம் பெற்றுக் கொண்டிருப்பதாக நாம் நம்புகின்றோம்.

முக்கிய கணக்காய்வு விடயங்கள்

முக்கிய கணக்காய்வு விடயங்கள் என்பது எமது தொழில்சார் சுயதீர்ப்பின் அடிப்படையில் இக் காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் போது முக்கியத்துவம் மிக்கவையாக காணப்பட்ட விடயங்களாகும். இந்த விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் ஒட்டுமொத்த அடிப்படையிலான கணக்காய்வின் சூழலில் அதன் மீது ஒரு அபிப்பிராயத்தை உருவாக்கும் வேளையில் எதிர்கொள்ளப்பட்டிருப்பதுடன் இந்த விடயங்கள் மீது தனித்தனியான அபிப்பிராயத்தை நாம் வழங்கவில்லை. கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விடயங்கள் தொடர்பாகவும் அந்த சூழ்நிலைகளில் கணக்காய்வு எவ்வாறு அவற்றை எதிர்கொண்டது என்பது தொடர்பான விளக்கத்தினை நாம் வழங்கி இருக்கின்றோம்.

இந்த விடயங்கள் உள்ளடங்கலாக, எமது அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் பகுதியில் விபரிக்கப்பட்ட எமது பொறுப்புகளை, நாம் நிறைவேற்றி இருக்கின்றோம். அந்த வகையில், எமது கணக்காய்வு நிதிக் கூற்றுக்களில் பொருண்மைமிக்க பிறழ்கூற்றுக்களுக்கான இடர் மதிப்பீடுகளுக்கு துலங்கல் அளிக்கும் வகையிலான கணக்காய்வு செயன்முறைகளின் நிறைவேற்றத்தினை எமது கணக்காய்வு உள்ளடக்கி இருக்கின்றது. எமது கணக்காய்வு செயன்முறைகளில் பெறுபேறுகள் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களை முகம் கொடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகள் உள்ளடங்கலாக, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் மீதான எமது அபிப்பிராயத்துக்கான ஒரு அடிப்படையினை வழங்குகின்றன.

முக்கிய கணக்காய்வு விடயம்	முக்கிய கணக்காய்வு விடயத்தினைக் கணக்காய்வு முகம் கொடுத்துள்ள விதம்
நிதிசார் சொத்துகளின் மீது எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கான கொடுப்பனவுகள் கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்து எழும் நிதிசார் இழப்புகள் இழப்புகளுக்கான கொடுபனவுகள் ரூ. 250 பில்லியன் (குறிப்பு 6 மற்றும் 7) என்பது குறிப்பு 2.2.10 இல் விளக்கப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்பட்டது. பின்வரும் காரணிகளால் இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கணக்காய்வு விடயமாக அமைந்திருந்தது. ▪ அவ்வாறான நிதிச் சொத்துகளை மீட்பதற்காக எதிர்கால பணப்பாய்ச்சல்களுடன் தொடர்புடைய நிர்வாகத்தின் எதிர்பார்ப்புடன் தொடர்புடைய பெருமளவு நிர்வாக தீர்மானங்கள், அனுமானங்கள் மற்றும் உறுதியற்ற தன்மை தொடர்பான மதிப்பாய்வு நிலை: மற்றும் ▪ எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகள் தொடர்பில் அறிக்கையிடப்பட்ட கொடுப்பனவு தொகையின் வகைப்படுத்தல் மற்றும் அதன் தீர்மானமெடுத்தலில் பின்பற்றியிருந்த சிக்கல்கள் நிறைந்த கணிப்பீடுகள் போன்றன. நிர்வாகத்தினால் பயன்படுத்தப்பட்ட பெருமளவு தீர்மானமெடுத்தல்கள் மற்றும் அனுமானிப்புகள் மற்றும் மதிப்பீடுகளில் உள்ளடங்கியிருக்கும் பிரதான பிரிவுகளில், எதிர்காலத்தில் நிகழுமென அனுமானிக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும்:.அல்லது கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தூர நோக்குடைய பொரும்பொருளாதார நிலைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய சிறப்பு நிலைகள், போன்றன மதிப்பீட்டு உறுதியற்ற தன்மைக்கு உட்பட்டதாக அமைந்திருக்கும்.	**கொடுகடன் சேத இழப்பிற்கான ஏற்பாட்டின் போதுமையினைத் தீர்ப்பதில், எமது கணக்காய்வு நடைமுறைகள் பின்வரும் முக்கிய நடைமுறைகளை உள்ளடக்கியிருந்தது:** ▪ எமது அறிக்கைத் திகதி வரை கிடைக்கப்பெறுகின்ற சிறந்த தகவல்களின் அடிப்படையில் அதன் கணக்கீட்டுக் கொள்கைகளுடனான சந்தைப் பொருளாதார தளம்பலுக்கு பதிலிறுத்தல் உள்ளடங்கலாக கொடுகடன் சேதஇழப்பு கணிப்புகளுக்கு ஏதுவாகின்ற முறையிலகளுக்கும் கம்பனியின் ஏற்பாட்டின் இணக்கத்தினைக் கணிப்பிட்டோம். ▪ கொடுகடன் சேதஇழப்பு மதிப்பீட்டின் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளை நாம் மதிப்பிட்டோம், இது சபை மற்றும் முகாமைத்துவம் மூலமான சேதஇழப்பு ஒதுக்கீட்டுக் கொள்கைகளின் மற்றும் நடைமுறைகளின் மேற்பார்வையின் மட்டத்தைக் கணிப்பிடுதல், மீளாய்தல் மற்றும் அனுமதித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. ▪ தொடர்புடைய மூல ஆவணங்கள் மற்றும் கம்பனியின் கணக்கியல் பதிவுகளுக்கு விவரங்களை இணக்கப்படுத்துவதன் மூலம் சேத இழப்பு விடுதொகைகளின் கணக்கீட்டில் பயன்படுத்தப்படும் அடிப்படைத் தரவின் முழுமைத்தன்மை, துல்லியத்தன்மை மற்றும் வகைப்படுத்தலை நாங்கள் சரிபார்த்தோம். ▪ கடன் தர மதிப்பாய்வுகள் மற்றும் தொடர்புடைய நிலை வகைப்படுத்தல்களை மதிப்பாய்வு செய்திருந்தது. ▪ நிர்வாகத்தினால் எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய நிகழ்வுகள் தொடர்பான அனுமானம் மற்றும்:.அல்லது பெறுமதிக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பணப்பாய்ச்சல் எதிர்வுகூரல்கள், மீட்டல் செயற்பாடு நிலைகள், தூர நோக்குடைய பெரும்பொருளாதார நிலைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய சிறப்பம்சங்கள் பற்றி பின்பற்றப்பட்டிருந்த தீர்மானங்கள், அனுமானங்கள் மற்றும் மதிப்பாய்வுகள் போன்றவற்றை மதிப்பாய்வு செய்திருந்தது. ▪ குறிப்புகள் 6 மற்றும் 7 இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிதிசார் அறிக்கை வெளிப்படுத்தல்களுடன் தொடர்புடைய போதுமையை மதிப்பாய்வு செய்திருந்தது.
நிதி அறிக்கையிடல் தொடர்பான தகவல் தொழிநுட்ப அடிப்படையிலான அகக் கட்டுப்பாடுகள் நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையின் கணிசமான பகுதியானது தன்னியக்க செயன்முறைகள் மற்றும் அகக் கட்டுப்பாடுகளுடன் கூடிய பல தகவல தொழிநுட்ப முறைமைகளில் பிரதானமாகத் தங்கியுள்ளது. மேலும், முக்கிய நிதிக்கூற்று வெளிப்படுத்தல்கள் தகவல் தொழிநுட்ப முறைமைகளால் உருவாக்கப்பட்ட தரவு மற்றும் அறிக்கைகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டு, அவை பரம்பல்தாள்களைப் பயன்படுத்தி மேலும் செயலாக்கப்பட்டு வடிவமைக்கப்படுகின்றன. அதன்படி, நிதி அறிக்கையிடல் தொடர்பான தகவல் தொழிநுட்ப அடிப்படையிலான அகக் கட்டுப்பாடுகள் ஒரு முக்கிய கணக்காய்வு விடயமாகக் கருதப்படுகிறது.	**எமது மதிப்பாய்வு செயன்முறைகள் பின்வரும் பிரதான விதிமுறைகளை உள்ளடக்கியிருந்தது:** நிதி அறிக்கையிடல் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் தொடர்பான செயன்முறைகளின் அகக் கட்டுப்பாட்டு சூழல் பற்றிய புரிதலைப் பெற்றோம். ▪ எமது உள்ளக நிபுணத்துவ வளங்களை ஈடுபடுத்தியிருந்தோம் மற்றும் - நிறுவனத்தின் தகவல் தொழிநுட்ப ஆளுகை கட்டமைப்பு பற்றிய புரிந்துணர்வை பெற்றோம். - பாவனையாளர் அணுகல் மற்றும் மாற்ற முகாமைத்துவம் போன்றவற்றுடன் தொடர்புடைய உள்ளக கட்டுப்பாடுகளுடன் தொடர்புபட்ட தகவல் கட்டமைப்புகளின் செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் அலங்காரத்தை இனங்கண்டு, பரிசோதித்து மற்றும் மதிப்பீடு செய்தல். - நிறுவனத்துடன் தொடர்புடைய சைபர் பாதுகாப்பு இடர்கள் தொடர்பில் உயர்மட்ட புரிதலை பெற்றுக் கொண்டதுடன், இந்த இடர்களை நிவர்த்தி செய்வதற்கு சைபர் பாதுகாப்பு இடர்களை நிவர்த்திப்பதற்கான செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளினூடாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளைப் பற்றியும் புரிந்து கொண்டோம். ▪ துல்லியத்தன்மை மற்றும் பூர்த்திக்கான வெளிப்படுத்தல்களை ஏற்படுத்துவதற்கு, பயன்படுத்தப்பட்ட அறிக்கைகளின் மூலத் தரவுகள் பரிசோதிக்கப்பட்டன.

முக்கிய கணக்காய்வு விடயம்	முக்கிய கணக்காய்வு விடயத்தினைக் கணக்காய்வு முகம் கொடுத்துள்ள விதம்
முதலீட்டு சொத்துகளில் காணப்படும் காணி மற்றும் முதலீட்டு சொத்துகளில் நேர்த்தியான பெறுமதிகளில் அமைந்த காணி மற்றும் கட்டிடங்கள் அடங்கியிருக்கும். நிறுவனத்தினால் ஈடுபடுத்தப்பட்ட வெளியக விலைமதிப்பீட்டாளர்களினால் காணி மற்றும் கட்டிடங்களின் நேர்த்தியான பெறுமதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்வரும் காரணிகளால் இந்த கணக்காய்வு முக்கியமானதாகும்: ▪ அறிக்கையிடப்பட்ட திகதியில் நிறுவனத்தின் மொத்த சொத்துகளின் 13மு ஐ கொண்டதாக ரூ. 48 பில். வரை காணி மற்றும் கட்டிடங்களின் நேர்த்தியான பெறுமதி அமைந்திருந்தமை மற்றும் ▪ சந்தை வழிமுறையை பின்பற்றி காணி மற்றும் கட்டிடங்களின் நேர்த்தியான பெறுமதி மதிப்பிடலின் போது உறுதியற்ற தன்மை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த அனுமானங்கள், தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகள். முதலீட்டுச் சொத்துக்கள் அதன் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் 2.4 மற்றும் 12 இல் வெளிப்படுத்தப்பட்டபடி சீர்மதிப்பில் மேற்கொள்ளப்படுகின்றன. இது பின்வரும் காரணங்களால் ஒரு முக்கிய கணக்காய்வு விடயமாக கருதப்பட்டு இருந்தது: ▪ காணியின் பேர்ச் ஒன்றின் மதிப்பீட்டு பெறுமதி ▪ கட்டடங்களின் சதுர அடி ஒன்றுக்கான மதிப்பீட்டு பெறுமதி	**எமது கணக்காய்வு நடைமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது:** ▪ கம்பனியினால் பணிக்கமர்த்தப்பட்ட புற மதிப்பீட்டாளரின் திறன்கள், இயலுமைகள் மற்றும் சுயாதீனத்தன்மை ஆகியவற்றை நாங்கள் மதிப்பீடு செய்தோம். ▪ காணி மற்றும் கட்டடங்களின் மதிப்பீட்டில் புற மதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய மதிப்பீடுகள் மற்றும் மதிப்பீட்டு நுட்பங்களைப் பற்றிய புரிதலைப் பெறுவதற்காக மதிப்பீட்டு அறிக்கைகளைப் படித்தோம். ▪ புற மதிப்பீட்டாளரால் பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு நுட்பங்களின் சரியான தன்மையை மதிப்பிடுவதற்கும், ஒரு பேர்ச் நிலத்தின் விலை மற்றும் ஒரு சதுர அடி கட்டடத்தின் பெறுமதி போன்ற குறிப்பிடத்தக்க சுயதீர்ப்புகள் மற்றும் அனுமானங்களின் நியாயத்தன்மையை மதிப்பிடுவதற்கும் எமக்கு உதவ எமது அக நிபுணத்துவ வளங்களை நாம் ஈடுபடுத்தினோம். ▪ மேலும், குறிப்பு 2.4 மற்றும் 12 இல் தொடர்புடைய நிதிக்கூற்று வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மையை மதிப்பீடு செய்தோம்.

நிறுவனத்தின் 2024 ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்ட பிற தகவல்கள்

பிற தகவல்கள் என்பது நிதிக் கூற்றுக்கள் மற்றும எமது கணக்காய்வாளர் அறிக்கை தவிர்ந்த, நிறுவனத்தின் 2024 ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களாகும். பிற தகவல்களுக்கு முகாமைத்துவமே பொறுப்புடையதாகும். இந்தக் கணக்காய்வாளரது அறிக்கைத் திகதிக்குப் பின்னர் நிறுவனத்தின் 2024 ஆண்டு அறிக்கை எங்களுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எமது அபிப்பிராயம் பிற தகவல்களை உள்ளடக்காது இருப்பதுடன், மேலும் நாங்கள் அவற்றின் மீது எதுவித உறுதிப்படுத்தல்களையும் வெளிப்படுத்தமாட்டோம்.

நிதிக்கூற்றுக்களின் மீதான எமது கணக்காய்வு தொடர்பாக, மேலே குறிப்பிட்டுள்ள மற்ற தகவல்கள் கிடைக்கும்போது அவற்றைப் படிப்பதும், அவ்வாறு செய்யும் போது, பிற தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடனோ அல்லது கணக்காய்வின் போது பெறப்பட்ட அறிவிலோ முரண்பட்டதாக உள்ளதா அல்லாதவிடத்து பொருண்மை மிக்க வகையில் பிறழ்கூற்றுக்கு உட்பட்டுள்ளதா என்பதைக் கருத்தில் கொள்வது எங்கள் பொறுப்பாகும்.

முகாமை மற்றும் ஆளுகைக்குப் பொறுப்பளிக்கப்பட்டவர்களது நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பொறுப்புகள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு மற்றும் தவறுகள் அல்லது மோசடிகளின் காரணமாக பொருண்மை மிக்க வகையில் பிறழ்கூற்றுக்களுக்கு உட்படாதவாறு நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க வசதியளிக்கும நோக்கில் முகாமை தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கு இணக்கமான முறையில் உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்கும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

முகாமைத்துவம் நிறுவனத்தினை கலைப்பதற்கோ அல்லது அதன் தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கோ அல்லது அத்தகைய செயற்பாடுகளுக்கு மாற்றீடான நடைமுறை சாத்தியமான தெரிவுகளேதும் இல்லாத நிலையில் காணப்படும் சூழ்நிலை தவிர ஏனைய சந்தர்ப்பங்களின் போது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில், நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் இயலுமையினை மதிப்பீடு செய்து, வெளிப்படுத்தி, தொடர்ந்து இயங்கும் தன்மையினைப் பயன்படுத்தி கணக்கீட்டினை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையினை மேற்பார்வை செய்யும் பொறுப்பினை ஆளுகைக்கு பொறுப்பளிக்கப்பட்டவர்கள் கொண்டிருக்கின்றார்கள்.

நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்கள் ஓர் ஒட்டுமொத்த அடிப்படையில் தவறுகள் அல்லது மோசடிகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மை மிக்க பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டுக் காணப்படுகின்றனவா என்பது தொடர்பான ஒரு நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொண்டு எமது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வாளர் அறிக்கையினை வழங்குவது எமது பொறுப்புகளாகும். நியாயமான உறுதிப்பாடு என்பது ஒரு உயர்தரமான உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வு ஒரு பொருண்மை மிக்க பிறழ்கூற்று காணப்படுகின்ற போது எப்போதுமே அதைக் கண்டுபிடிக்கும் என்பதற்கான ஒரு உத்தரவாதம் அல்ல. பிறழ்கூற்றுக்கள் மோசடிகள் அல்லது தவறுகளிலிருந்து ஏற்படுவதுடன், அவை தனியான முறையிலோ அல்லது திரண்ட வகையிலோ நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் அதன் பயனாளர்கள் மேற்கொள்கின்ற பொருளாதாரத தீர்மானங்கள் மீது செல்வாக்கு செலுத்தக் கூடும் என நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படுகின்றபோது, அவை பொருண்மை மிக்கவையாகக் கருதப்படும்.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு இணக்கமான கணக்காய்வின் ஒரு பகுதியாக, கணக்காய்வு முழுவதும் நாம தொழில்சார் சுயதீர்ப்பினைப் பிரயோகிப்பதுடன் தொழில்சார் ஐயப்பாட்டைப் பேணி வருகின்றோம். அத்துடன் நாம்:

- தவறு அல்லது மோசடியின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மை மிக்க பிறழ்கூற்றுக்களுக்கான இடர்களை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்து, அத்தகைய இடர்களுக்கு துலங்கலளிக்கும் வகையில் கணக்காய்வு செயன்முறைகளை வடிவமைத்து செயற்படுத்தி, அதன்மூலம அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையாக அமையக்கூடிய போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை சேகரிக்கிறோம். மோசடியானது கூட்டுச்சதி, ஆவண மோசடி, திட்டமிடப்பட்ட விடுபாடுகள், தவறான பிரதிநிதித்துவங்கள் அல்லது அகக் கட்டுப்பாடுகளின் மீறல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியிருப்பதன் காரணமாக மோசடி காரணமாக ஏற்பட்ட பொருண்மைமிக்க பிறழ்கூற்று ஒன்றினைக் கண்டறியாது விடுவதன இடரானது தவறு காரணமாக ஏற்பட்டிருக்கக் கூடிய பொருண்மைமிக்க பிறழ்கூற்று ஒன்றினைக் கண்டறியாது விடுவதனால் ஏற்படக்கூடிய இடரினை விட உயர்வானதாகும்.
- சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செய்முறைகளை வடிவமைக்கும் நோக்கில் அகக் கட்டுபாடுகள் தொடர்பான ஒரு புரிதலை பெற்றுக்கொள்ளுதல், ஆனால் இப் புரிதலானது அத்தகைய அகக் கட்டுப்பாடுகளின் மீது ஒரு அபிப்பிராயத்தை வழங்குவதற்காக பெற்றுக் கொள்ளப்படுவதில்லை.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் அவை தொடர்புபட்ட முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தலை மதிப்பாய்வு செய்தல்.
- கணக்கீட்டுக்கான தொடர்ந்து செல்லல் அடிப்படையின் முகாமையின் பயன்பாட்டின் பொருத்தப்பாடான தன்மை மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் இயலுமை மீது ஏதேனும் கணிசமான சந்தேகத்தினை ஏற்படுத்தத்தக்க நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமான பொருண்மைமிக்க நிச்சயமற்ற தன்மை காணப்பட்டிருக்கின்றதா என்பதனை முடிவு செய்கின்றோம். பொருண்மைமிக்க நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக எம்மால் முடிவு செய்யப்பட்டால், நிதிக்கூற்றுக்கள் காணப்படுகின்ற தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள் பற்றி எமது கணக்காய்வாளர் அறிக்கையில் நாம் கவனத்தை ஈர்ப்பதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக இல்லாதபோது எமது அபிப்பிராயத்தினைத திருத்தி அமைப்போம். எமது முடிவுகள் யாவும் கணக்காய்வாளர் அறிக்கைத் திகதி வரையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் அமைந்தவையாகும். எவ்வாறெனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனி தொடர்ந்து இயங்கும் இயலுமையினை இழக்கக்கூடும்.
- வளிப்படுத்தல்கள் உள்ளடங்கலான கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் மற்றும நிதிக்கூற்றுக்கள் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நியாயமான முன்னிலைப்படுத்தலை வெளிப்படுத்தத்தக்க வகையில் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்னும் விடயங்களை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுகள் தொடர்பில் கருத்துகள் வெளியிடுவதற்காக நிறுவனத்தினுள் அல்லது வியாபார செயற்பாடுகள் தொடர்பில் நிதிசார் தகவல்கள் பற்றிய பொருத்தமான கணக்காய்வு ஆதாரங்களை பெற்றுக் கொள்ளல். கணக்காய்வின் வழிநடத்தல், மேற்பார்வை மற்றும் செயற்திறனுக்கு நாம் பொறுப்பு வகிக்கின்றோம். எமது கணக்காய்வு கருத்துத் தொடர்பில் ஏக பொறுப்பை நாம் கொண்டுள்ளோம்.

ஏனைய விடயங்களினிடையே கணக்காய்வின் திட்டமிடப்பட்ட நோக்கம் மற்றும் நேரம் மற்றும் எமது கணக்காய்வின் போது நாம் அடையாளம் காணும் அகக்கட்டுப்பாட்டிலான ஏதேனும் முக்கிய குறைபாடுகள் உள்ளடங்கலான கணிசமான கணக்காய்வுக் கண்டறிதல்கள் ஆகியவற்றினை நாம் ஆளுகைக்கு பொறுப்பானவர்களுடன் தொடர்பாடல் செய்கின்றோம்.

சுயாதீனத்தன்மை தொடர்பான நெறிமுறைக் கோட்பாட்டிற்கு இணக்கமாக நாம தொழில்சார் நெறிமுறைத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியுள்ளோம் என்ற கூற்றினை ஆளுகைப் பொறுப்பளிக்கப்பட்டவர்களுக்கு நாம் வழங்குவதுடன் மேலும் எமது சுயாதீனத்தன்மை தொடர்பில் அவர்கள் தாங்கிக் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் அவர்களது கவனத்துக்குக் கொண்டுவர வேண்டிய அனைத்து வகையான உறவுமுறைகள் மற்றும் ஏனைய விடயங்கள், அத்துடன் அவசியமானவிடத்து தொடர்புடைய பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியன தொடர்பாகவும் தொடர்பாடல் செய்கின்றோம்.

ஆளுகைக்குப் பொறுப்பளிக்கப்பட்டவர்களுடன் தொடர்பாடல் செய்யப்படும் விடயங்களிலிருந்து, தற்போதைய காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வில் மிக முக்கியமானவையாகக் காணப்பட்ட விடயங்களை நாம் தீர்மானித்து அவற்றை முக்கிய கணக்காய்வு விடயங்களாக உள்ளடக்குகின்றோம். சட்டம் அல்லது ஒழுங்குவிதிமுறைகள் குறித்த விடயங்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்துவதைத் தடுக்காத சந்தர்ப்பங்களில் நாம் இந்த விடயங்களை எமது கணக்காய்வு அறிக்கையில் விபரிப்பதுடன், அவ்வாறு தடுக்கப்படும் போது குறித்த விடயங்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்துவதனால் ஏற்படும் பொது நலன் நன்மைகளைப் பார்க்கிலும் அவ்வாறு செய்வதனால் ஏற்படும் பாதகமான விளைவுகள் அதிகமாக இருக்கக்கூடும் என்பதால் அந்த விடயங்கள் தொடர்பாடல் செய்யப்படுதலாகாது என நாம் தீர்மானிக்கிறோம்.

பிற சட்ட மற்றும் ஒழுங்குவிதிமுறைத் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 163 (2) இன் படி, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நாங்கள் பெற்றுள்ளதுடன், மேலும் எமது பரீட்சித்தல்களின் படி, கம்பனி முறையான கணக்கியல் பதிவுகளைப் பேணியிருக்கின்றது.
இந்த சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கையில் கையொப்பமிடுவதற்கு பொறுப்பான பணிக்கமர்த்தல் பங்காளரின் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் உறுப்புரிமை இலக்கம் 2965 ஆகும்.

2024 ஜுன் 27
கணக்காய்வு அறிக்கை

மேலே தரப்பட்டுள்ள அறிக்கை கணக்காய்வாளர்களால் கையொப்பமிடப்பட்ட ஆங்கில கணக்காய்வு அறிக்கையின் மொழி பெயர்ப்பாகும்.
ஆங்கில அறிக்கைக்கும் மொழி பெயர்ப்புக்கும் இடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப்பட்டால், அதன் போது ஆங்கில அறிக்கையில் காணப்படும் விடயங்கள் எப்போதும் செல்லுபடியாகும்.

Partners: D K Hulangamuwa FCA FCMA LLB (London), A P A Gunasekera FCA FCMA, Ms. Y A De Silva FCA, Ms. G G S Manatunga FCA, W K B S P Fernando FCA FCMA, B E Wijesuriya FCA FCMA, R N de Saram ACA FCMA, Ms. N A De Silva FCA, N M Sulaiman ACA ACMA, Ms. L K H L Fonseka FCA, Ms. P V K N Sajeewani FCA, A A J R Perera FCA ACMA, N Y R L Fernando ACA, D N Gamage ACA ACMA, C A Yalagala ACA ACMA

Principals: T P M Ruberu FCMA FCCA MBA (USJ-SL), G B Goudian ACMA, Ms. P S Paranavitane ACA ACMA LLB (Colombo), D L B Karunathilaka ACMA, W S J De Silva Bsc (Hons) - MIS Msc - IT, V Shakthivel B Com (Sp)

A member firm of Ernst & Young Global Limited

நிதியியல் நிலைமைக் கூற்று

	31.03.2024 (தணிக்கை செய்யப்பட்டது) ரூபா.'000	31.03.2023 (தணிக்கை செய்யப்பட்டது) ரூபா.'000
சொத்துக்கள்		
காசும் காசுக்கு சமனானவைகளும்	11,486,914	16,484,822
வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களுடன் வைப்பு	4,060,475	2,493,925
அரசாங்க பத்திரங்கள் மற்றும் பிறவற்றில் முதலீடு	30,079,990	31,452,712
வழித்தோன்றல் நிதி கருவிகள்	-	64,428
கடன் செலவில் நிதி சொத்துக்கள்:		
நிதி குத்தகை	61,348,491	62,066,670
கடன்கள் மற்றும் முற்பணம்	188,293,271	184,501,588
முதலீட்டு பத்திரங்கள்	17,723,177	4,732,581
இணை நிறுவனங்களில் முதலீடு	249,943	564,085
இணைப்பாளர்களிடமிருந்து பெற வேண்டிய தொகை	111,146	57,161
பிற பெறத்தக்கவைகள்	3,403,197	5,477,987
இருப்பு	39,664	146,135
முதலீட்டு சொத்துக்கள்	48,313,343	41,252,661
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	12,362,617	11,552,982
மொத்த சொத்துக்கள்	**377,472,229**	**360,847,738**
பொறுப்புகள்		
வங்கி மிகைப்பற்று	5,017,647	8,783,895
வட்டி தாங்கும் கடன்கள்	20,912,613	31,429,414
வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்பு	206,368,226	201,270,901
வர்த்தக கொடுப்பனவுகள்	102,869	258,736
ஏனைய பொறுப்புகள்	16,001,594	10,890,336
வழித்தோன்றல் நிதி கருவிகள்	-	11,635
இணை கம்பனிகளுக்கு செலுத்தவேண்டிய தொகை	332,082	1,069,238
தற்போதைய வரி செலுத்த வேண்டியது	2,681,710	2,681,710
ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்பு	2,999,055	2,990,837
பணியாளர் நன்மை செலுத்துதல்கள்	710,961	652,807
மொத்த பொறுப்புகள்	**255,126,758**	**260,039,510**
பங்காளர்களின் நிதி		
பங்கு மூலதனம்	306,993,806	306,993,806
சட்டரீதியான ஒதுக்க நிதி	6,291,146	5,213,771
மறுமதிப்பீடு ஒதுக்கம்	1,247,188	1,247,188
பணப்புழக்க எட்ஜ் ஒதுக்கம்	41,014	41,014
நியாயமான மதிப்பு ஒதுக்கங்கள்	302,200	331,629
சட்டரீதியான பெறுமதி இழப்பு ஒதுக்கங்கள்	6,816,124	3,231,500
ஒருங்கிணைந்த ஒதுக்கங்கள்	(262,914,890)	(262,914,890)
வைத்திருக்கும் வருவாய்கள்	63,568,884	46,664,209
மொத்த மூலதனம்	**122,345,471**	**100,808,228**
மொத்த பொறுப்புகள் மற்றும் பங்கு	**377,472,229**	**360,847,738**
கடமைகள் மற்றும் தற்செயல்கள்	**30,512,446**	**31,665,622**
ஒரு பங்குக்கு நிகர சொத்து மதிப்பு	**3.70**	**3.05**

அடைப்புகளிலுள்ள இலக்கங்கள் கழிவுகளைக் குறிப்பிடுகின்றன.

தெரிவு செய்யப்பட்ட செயற்றிறன் குறிகாட்டிகள

விபரம்	இல் இருந்தவாறு 31.03.2024		இல் இருந்தவாறு 31.03.2023	
	உண்மை	தேவையானது	உண்மை	தேவையான
ஒழுங்குபடுத்தும் மூலதன போதுமை (%)				
அடிப்படை மூலதனம் (அடுக்கு 1 மூலதனம்) ரூ.'000	23.01%	10.00%	21.20%	10.00%
மொத்த மூலதன தளம் ரூ.'000	23.00%	14.00%	21.71%	14.00%
முற்பண பொறுப்புகள் விகிதத்திற்கான நிதி மூலதனம்	42.17%	10.00%	38.01%	10.00%
சொத்துக்களின் தரம் (கடன்களுக்கான தரம்) (%)				
திரட்டிய தொழிற்படா முற்பணங்கள் ரூ."000	13.86%		14.58%	
தேறிய தொழிற்படா முற்பண விகிதம் மூ	10.48%		9.65%	
தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் (எ)	31.12%		32.71%	
மைய மூலதன விகிதத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம்	24.38%		31.65%	
இலாபத்தன்மை (மூ) (%)				
வட்டி எல்லை	12.99%		12.68%	
சொத்துக்களின் மீதான வருவாய் (வரிக்கு முன்)	5.84%		3.83%	
உரிமை மீதான வருவாய் (வரிக்கு பின்)	19.31%		14.29%	
வருமானத்திற்கான செலவூ விகிதம்	42.37%		43.55%	
ஒழுங்குபடுத்தப்பட்ட திரவத்தன்மை (ரூ."000) (%)				
தேவையான குறைந்தபட்ச திரவச் சொத்தின் தொகை	182.24%		127.64%	
வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள்	17.50%		12.26%	
விஞ்ஞாபனத் தகவல்கள்				
கிளைகளின் எண்ணிக்கை	212		265	
வெளிவாரி கொடுகடன் தரமிடல	(SL) A (Stable outlook)		(SL) A (Stable outlook)	
கடந்த 6 மாதங்களில் விதிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தண்டங்கள்				
தொகை (ரூ.மில்லியனில்)	-		-	
ஒழுங்குமுறைப்படுத்தல் வைப்புக் கட்டுப்பாடுகள				
மொத்த வைப்புக்கள் மீதான உச்ச எல்லை (ரூ.மில்லியன்)	-		-	
வைப்புக்களின் அளவைக் குறைத்தல் மாதம்/ காலாண்டு ஆண்டு ஒன்றிற்கு (ரூ.மில்)	-		-	
வைப்புக்களை முடக்குதல்	-		-	
ஒழுங்குமுறைப்படுத்தல் கடன்பாடுகள் கட்டுப்பாடுகள்				
மொத்த கடனபாடுகள் மீதான உச்ச எல்லை (ரூ.மில்லியன்)	-		-	
கடன்பாடுகள் சொத்துப்பட்டியல்கள் அளவைக் குறைத்தல் மாதம்/ காலாண்டு:.ஆண்டு ஒன்றிற்கு ('ரூ.மில்)	-		-	
கடன்பாடுகளின் முடக்கம்	-		-	
ஒழுங்குமுறைப்படுத்தல் கடன்வழங்கல் கட்டுப்பாடுகள்				
மொத்தக் கடன் வழங்கல் சொத்துப்பட்டியல் மீதான உச்சஎல்லை (ரூ.மில்)	-		-	
கடன்வழங்கல் சொத்துப்பட்டியல்கள் அளவைக் குறைத்தல மாதம்/ காலாண்டு/ ஆண்டு ஒன்றிற்கு (ரூ.மில்)	-		-	
புதிய கொடுகடன் வசதிகளை வழங்குதல் அத்துடன்/ அல்லது ஏற்கனவே உள்ள கொடுகடன் வசதிகளின் தவணைக் காலத்தை நீடித்தல் மீதான கட்டுப்பாடுகள	-		-	
வேறு ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள				
தயவூசெய்து குறிப்பிடவூம்	-		-	

குறிப்பு: ஏப்ரல் 1, 2023 முதல், கடன் வசதிகளை செலுத்தாத கடன்கள் என வகைப்படுத்துவதற்கான அளவுகோல் 120 நாட்களில் இருந்து 90 நாட்களாக மாற்றப்பட்டது.

Lanka Rating Agency லங்கா கடன் மதிப்பீட்டால் LOLC நிதி நிறுவனம் ஏ (நிலையான) என மதிப்பிடப்பட்டுள்ளது.

கீழே கையொப்பமிட்டுள்ள LOLC :.பினான்ஸ் பிஎல்சி இன் பிரதான நிறைவேற்று அலுவலராக, நிதிக் கட்டுப்பாட்டாளராக மற்றும் இணங்குவிப்பு அலுவலராகவுள்ள நாங்கள் கூட்டாக பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றௌம்.
(அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.
(ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியூள்ள தகவல்கள் கணக்காய்வூ செய்யப்பட்டது உரிமம்பெற்றநிதிக் கம்பனிகளின் நிதியியல்கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

(கையொப்பமிடப்பட்டது)	(கையொப்பமிடப்பட்டது)	(கையொப்பமிடப்பட்டது)
திரு. கிரிஷான் திலகரத்ன	திரு. புத்திக வீரதுங்க	திரு. ஜித்தேந்திர குணதிலக
இயக்குனர் / தலைமை நிர்வாக அதிகாரி	தலைமை நிதி அதிகாரி	இணக்க அதிகாரி

ஜுன் 27, 2024 கொழும்பு

LOLC பினான்ஸ் பிஎல்சி
இல. 100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய, இலங்கை.
தொலைபேசி: 011 5715555 தொலைநகல்: 011 2865606 மின்னஞ்சல்: info@lolcfinance.com
இணையம்: www.lolcfinance.com